1994 மே 2]

அளிக்கப்படுகிறது. இரண்டாவது வகை, தெரு ஓரச் சிறுவர்கள் முழுவதும் சாலையை நம்பியே வாழ்கிறார்கள். அவர்கள் தங்களுடைய குடும்பத்தோடு எந்த உறவையும் வைத்துக்கொள்வது இல்லை. அவர்களுக்கும் அரசு உதவி வழங்குகின்றது. மூன்றாவது வகையான தெரு ஓரச் சிறுவர்கள் பெரும்பாலும் தெருவிலே சிறுவர்களைப் போல காணப்படுவார்கள். ஆயினும் அவர்கள் முற்றிலும் தங்களது குடும்பங்களிலிருந்து புறக் கணிக்கப்பட்ட நிலையில் தெருவையே நம்பி வாழக்கூடிய அநாதைச் சிறுவர்கள் ஆவார்கள். இவர்களையும் அரசாங்கம் எடுத்துக் கொண்டு, இவர்களுக்கும் எல்லா உதவித் தொகைகளையும் வழங்குகின்றது. இப்படி தெரு ஓரத்தில் வாழக்கூடிய அந்தச் சிறுவர்களுக்கு கல்விப் பயிற்சி அளிப்பதற்கும், தொழில் பயிற்சி அளிப்பதற்கும் ஒவ்வொரு இல்லத்திற்கும் 7500 ரூபாய் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 472. திரு.ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

472—

திருப்பத்தூர் தொகுதி வளர்ச்சிக்கு அப்பகுதியிலுள்ள சந்தன மரத்தின் மூலம் கிடைக்கும் வருவாயைச் செலவிடுதல்.

** 21277—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:*

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி ஜவ்வாது மலையில் கிடைக்கும் சந்தன மரங்களால் கிடைக்கும் வருமானத்தில் 10 சதவீதம் திருப்பத்தூர் தொகுதி வளர்ச்சிக்கு அரசு செலவு செய்ய ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏற்கெனவே இது சம்பந்தமாக ஆவன செய்யப்படுகிறது. தமிழக அரசு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனம் என்றாலே எல்லோருக்கும் ஜவ்வாது மலைதான் ஞாபகத்திற்கு வரும். இந்தியாவிலே முதல் தரமான சந்தன மரம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1994 மே 2

என்னுடைய திருப்பத்தூர் தொகுதியில் ஜவ்வாது மலையில்தான் விளைகிறது. 6 மாதங்களுக்கு ஒரு முறை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி— சந்தன மரம் என்றால் மணக்கும் என்பது ஊருக்கு எல்லாம் தெரியும்— அந்த மணக்கிற சந்தன மரத்தில் இருந்து வருகிற வருமானத்தில் 10 சதவீதம் உங்கள் தொகுதிக்கு வேண்டும் என்கிறீர்கள். அவர், பரிசீலிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார். அந்த 10 சதவீதத்திற்குள்ளேதான் உங்கள் கேள்வி இருக்க வேண்டும். சந்தனம் மணக்கிறது தெரியாதா?

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் வனச் சரகத்திலே 6 மாதங்களுக்கு ஒரு முறை, வருடத்திற்கு இரண்டு முறை சந்தனக் கட்டைகளை ஏலம் விடுகிறார்கள். தொழில் அதிபர்கள் போட்டி போட்டுக்கொண்டு அதை எடுக்கிறார்கள். சென்ற ஆண்டில் மட்டும் 8 கோடி ரூபாய்க்கு சந்தனக் கட்டைகள் விற்பனை ஆனது. சென்ற தி.மு.க. ஆட்சியிலே ஆண்டு ஒன்றுக்கு 2 கோடி, 3 கோடி தான் விற்பனை ஆனது. நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு சந்தனக் கட்டைகள் திருட்டை அறவே ஒழித்து விட்டார்கள். இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் நல்ல விற்பனையாகி இருக்கிறது. இந்த ஆண்டு 8 கோடி ரூபாய் சந்தன மரங்கள் விற்பனையாகி இருக்கிறது. அதிலே ஒரு பகுதியாவது திருப்பத்தூர் தொகுதி வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் பகுதியில் சந்தன மரக்கிடங்கு இருக்கிறது. எனவே அந்தப் பகுதியிலிருந்து விற்பனையாகும் சந்தன மரங்கள் முழுவதும் திருப்பத்தூர் தொகுதியில் உற்பத்தியாவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத வேண்டாம். பல்வேறு பகுதிகளிலிருந்து கிடைக்கிற சந்தன மரங்கள் எடுத்து வரப்பட்டு அங்கே வைத்து இறுதி இணக்கம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. ஆகவே, அந்தப் பகுதியில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 200 டன் சந்தன மரங்கள் திருப்பத்தூர் பகுதியிலிருந்து ஏலம் விடப்படுகிறது. இதிலே திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலையிலிருந்து மட்டும் ஒரு கோடி ரூபாய் வருமானம் கிடைப்பதாக இந்தத் துறை கணக்கெடுத்து இருக்கிறது. எனவே, அந்த வருமானத்திலிருந்து தற்போது 11 சதவீதம் செலவு

1994 மே 2]

செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10 சதவீதமே கேட்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியில் பழங்குடியினர் மேம்பாடு திட்டத்தின் கீழ் திருப்பத்தூர் ஜவ்வாது மலைப்பகுதியில் 11 இலட்சம் ரூபாய் ஆண்டுதோறும் செலவிடப்படுகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 473, திரு.வே. பெரியசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

473—

அந்தியூர் தொகுதியில் புதிய ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்குதல்

*** 16627—திரு.வே. பெரியசாமி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் கீழ்வாணி ஊராட்சியில் 'இந்திரா நகர்' பகுதியிலும், குப்பாண்டாம்பாளையம் ஊராட்சியில் 'நஞ்சுண்டாபுரத்திலும்' பள்ளிப்பாளையம் என்ற ஊரிலும் புதிய ஆரம்பப்பள்ளிகளைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி கீழ்வாணி ஊராட்சியில் இந்திரா நகர் பகுதியிலும், குப்பாண்டாம்பாளையம் ஊராட்சியில் பள்ளிபாளையத்திலும் புதிய ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் தொடங்கப்பட்டு நடந்து வருகின்றன. இதைத்தவிர அந்தியூர் தொகுதியில் கூர்மையானூர், கூழிவலசு ஆகிய இடங்களில் தொடக்கப்பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. கருத்துரு பெறப்படாததால் நஞ்சுண்டாபுரத்தில் புதிய பள்ளி தொடங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயிற்றுக்கு சோறிட வேண்டும் இங்கே வாழும் மனிதருக்கெல்லாம், பயிற்சி பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டுமென்று பாடினார்கள் பாட்டுக்கொரு புலவன் பாரதியார் அவர்கள். அந்த பாரதியார் அவர்களுடைய கனவை நனவாக்கும் பொருட்டு இந்த ஆண்டு பட்ஜெட்டில் 2002.46 கோடி ரூபாயை இதயதெய்வம், நாங்கள் எல்லாம் கடவுளாக வணங்கிக் கொண்டிருக்கிற, ஒப்பற்றத் தலைவி